DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Preliminary Register — Case No:CC. 196 of 2015

Sessions

Deposition of Witness for — PW 1

Name : திரு.சந்தோஷ்குமார்

Age : 40

Father's/Husband's Name : ராஜாமணி

Village : காரணம்பேட்டை

Taluk : பல்லடம்

Occupation : ஒர்க் ஷாப் தொழில்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of December 2019

முதல் விசாரணை: நாள். 19.12.2019

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஒர்க் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 15.03.2014 அன்று இரவு 9 மணிக்கு என் கடையை சாத்திவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டு மறுநாள் காலை 9 மணிக்கு கடைக்கு வந்து பார்த்தபோது என் கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்றுபார்த்தபோது கடையில் இருந்த யூ பி எஸ் பேட்டரி மற்றும் வண்டிகளுக்கான பேட்டரி மொத்தம் 19 ஐ காணவில்லை. அதனால் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1., போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தார்கள். காணாமல்போன என்னுடைய பொருட்கள் இதுவரை கிடைக்கவில்லை. சம்பவம் தொடர்பாக போலீசார்

என்னை விசாரித்தனர். அப்போது ஒரே ஒரு பேட்டரி மட்டும் இருப்பதாக சொன்னார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Preliminary Register — Case No:CC. 196 of 2015

Sessions

Deposition of Witness for — PW 2

Name : திரு.ராமச்சந்திரன்

Age : 30

Father's/Husband's Name : பழனிச்சாமி

Village : காரணம்பேட்டை

Taluk : பல்லடம்

Occupation : கணக்காளர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of December 2019

முதல் விசாரணை: நாள். 19.12.2019

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கணக்காளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் என்னுடைய கட்டிடத்தில் பேட்டரி கடை வைத்துள்ளார். சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு நாங்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். மறுநாள் வந்து பார்த்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டு பேட்டரியை யாரோ திருடிசென்றுவிட்டிருந்தார்கள். அக்கம்பக்கம் விசாரித்து பார்த்துவிட்டு அ.சா-1 காவல்நிலைய்த்தில் புகார் கொடுத்தார். போலீசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:</u>

குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

<u>மறு விசாரணை </u>இல்லை